DUPLICATE

பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதிஞு (1889) ஆவணிமீ உஉ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஞு 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. | 9-40 |
| சொவேரய்ப்பகுதி: ,, | ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | சதம் | 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | | |
|---|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. | 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. | 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. | 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் | 65 |

அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கடு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞு ஆடிமீ உகூ (கஅ௯உ ஆகஸ்ட்டு கஙு) திங்கட்கிழமை. { இலக்கம்—கஉ.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிதூ அணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேழு
மதம்பூத்த விநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாரால்
பிரசுரஞ் செய்யப்பெற்ற

## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | கடு |
| மூன்றும் பாலபாடம் ,, | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ச0 |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கற்"வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது. விளக்கத்துடன் | எடு |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩0 |
| கிருட்டிணன் றூது, உரையுடன் | அடு |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கிலமொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும் ... | உடு |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | உடு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை கிளேஸ்காகிதம் ... ... ... | க-உடு |
| நல்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | சு |
| குமணசரித்திரம் ,, | சு |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப் பெற்றது... ... ... ... ... | கடு |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

சபையாரால்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்றனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளையுடைய கடையிலும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

## சாலாமிஷ்ரி லேகியம்.

இந்தலேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்து பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்திருக்கிறேன்.

இது சாலாமிஷ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளி பஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணி, பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருதலைக்குத்துள்ளுண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, குல்லைவாய்வு, இன்னும் அநேக சுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால்ருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினல் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
ஆரப்பத்தை,
காத்தான்குடி போஸ்து,
(M. 1.) மட்டுக்களப்பு.

## ஸ்ராண்டேர்ட் கொளுக்கியோடுகள்.
### (Standard Tiles.)

இவை வேரேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ராண்டேர்ட் ஓட்டுக் கம்பனியாரால் செய்யப்படுவன,

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டின் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்[illegible] திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்வீரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(H. 18.)

## விளம்பரம்.

கல்ஞர்பஸ்பம்:—1890ஞு தொடங்கி நாளது வரையில் அநேக மாயிரம்ஜனங்களுக்கு கைவல்லியமாகிய இந்த கல்ஞர்பஸ்பம் பல் வில்யிருகட்டுதல், யிருவளருதல், யிருகுறைதல், யிருகள் வீக்கம், சீழ்வருதல், பல் அசைதல், ஆடல், குத்தல், கடுத்தல், சொற்பநாளாய் இரத்தம்வருதல், வாய்நாற்றம் இவைகளை 2அல்லது3வேளை




யிற் சௌக்கியமாக்கும்; பல் கறுக்காது. இந்த மருந்தினல் வேறு வியாதிகள் உண்டாகாது; எத்தனை நாள் வைத்திருந்தாலும் கெட்டுப்போகாது; சிறுகுழந்தைமுதல் உபயோகித்துவந்தால் சுகஜன்னியாலுண்டாகும் எவ்விதமான பல்வியாதிகளும் வராது; பெண்கள் புருஷர்கள்முதலான யாவர்களும் உபயோகப்படுத்தலாம்.

(M. 26.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இதனைற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிசைஷு பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேறும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பீ. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
(Q. 40) வைத்தியசாலை, பழனி. S. I.

Telegrams: "APPANNA", BANGALORE CITY

## கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,

பெங்களூர் நகர்,
(இந்தியா).

### பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

ரூ.அ.பை.

பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை 0-12-0 முதல் ரூபா 2-0-0 வரை.
புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 4-0-0 வரை.
மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 3-0-0 வரை.
ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 7-0-0 வரை.
கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.
அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 20-0-0 வரை.
வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ. 0-4-0 முதல் ரூபா 5-0-0 வரை.
புனுகு தோலா 1க்கு விலை ரூபா 10-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.
தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா 2-0-0 முதல் ரூபா 3-0-0 வரை.

### கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12-0. டஸன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0 டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

### ஓட்டோ வாஸனை ஸெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

### சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

### சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(Y. 16.) (INDIA).

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

### புஷ்டிக்கு கைகண்ட ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோனபலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பீ. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2.

### பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 38.) வைத்தியசாலை, பழனி. S I

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரி ஆடி மீ 29௳ திங்கட்கிழமை.

## இலங்கைச் சிறைவாசிகள்.

இலங்கையிலுள்ள சிறைக்கூடங்களின் தலைமை உத்தியோகத்தராகிய மிஸ்தர் டௌக்கர் சென்ற 1922-ம் ஆண்டிற்குரிய சிறைச்சாலை அறிக்கைப் பத்திரத்தை வெளியிட்டிருக்கின்றனர். அதில் நாங்கள் படித்துச் சிந்திக்கவேண்டிய சில விஷயங்களுள.

1922-ம் ஆண்டில் குற்றவாளிகளெனக் கண்டு சிறை விதிக்கப்பெற்றவர்களின் தொகை 10860 1921-ம் ஆண்டில் சிறைத் தீர்ப்புப் பெற்றவர்களின் தொகை 12775. எனவே 21-ம் ஆண்டிலும் பார்க்க 22-ம் ஆண்டில் 1915 பேர் குறைவாயிருக்கின்றனர். சிறைச்சாலையிலிருந்து தப்பியோடியவர் நால்வர். இவர்களுள் மூவர் முறையே மாறை, தங்காலை, அநுராசபுரம் என்னும் 3 சிறைச்சாலைகளிலுமிருந்து தப்பியோடினர். ஒருவன் மட்டக்களப்பில் விளக்கமறியலிலிருக்கும் போது தப்பியோடினன். 1922-ம் ஆண்டில் மரணதண்டனை விதிக்கப்பெற்றோர் 49 பேர். இவர்களுள் தூக்கிட்டுக் கொல்லப்பட்டோர் 36 பேர். இந்த 36 பேருள் 32 பேர் சிங்களர். மூவர் தமிழர். ஒருவன் மகமதியன். வடமாகாணத்திலே தூக்கிக் கொல்லப்பட்டவன் ஒருவன். எஞ்சிப் பதின்மூன்றுபேரும் மரணதண்டனைக்குப் பதிலாகச் சீவபரியந்தம் சிறை விதிக்கப்பட்டனர். 21-ம் ஆண்டில் மரணத்தீர்ப்புப் பெற்றவர் 63 பேர். இவர்களுள் தூக்கிக் கொல்லப்பட்டவர் 49 பேர். எஞ்சிய 14 பேரும் சீவபரியந்தம் சிறைத்தண்டனையாக மாற்றப்பெற்றனர். 22-ம் ஆண்டிலே நடந்த கொலை 108. 21-ம் ஆண்டிலே நடந்த கொலை 135.

22-ம் ஆண்டிலே சிறையாளர் பொருட்டு ஒவ்வொருவருக்கும் 225 ரூபா 33 சத விகிதம் செலவுசெய்யப்பட்டது. இவர்கள் செய்த வேலைக்காக உதவப்பட்ட தொகையும் அவர்கள்செய்த கைத்தொழிற் பொருட்களை விற்று வந்த தொகையுஞ் சேர்ந்து 520883 ரூபா 95 சதமாகும். எனவே ஒவ்வொரு சிறையாளனுக்கும் 88 ரூபா 69 சத விகிதம் வந்திருக்கின்றது. இவர்கள் செய்த வேலைகள் தச்சவேலை, கொல்வேலை, தையல்வேலை, பிரம்புப்பின்னல்வேலை, கயிற்றுப் பாய்வேலை முதலிய தொழில்களாம். இவைகளைத் தவிர, 224 பேர் அரசாங்க அச்சியந்திரசாலையில் வேலைசெய்துள்ளனர். வைத்தியப்பகுதியிலும் புகைரதப் பகுதியிலுமிருந்துவந்த அழுக்குத் துணிகளெல்லாம் மறியற்காரராலேயே ஒலிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலே கடலை நிரப்பித் தரையாக்கும் வேலையும் சிறையாளர்களாலேயே செய்யப்பட்டு வருகின்றது. இந்த இடத்தில் நாள்தோறும் 118 பேர் விகிதம் வேலைசெய்துவந்துள்ளனர். 64½ ஏக்கர் கொண்ட நிலத்தில் 58½ ஏக்கர் நிலம் நிரப்பப்பட்டு முடிந்தது. குற்றவாளிகளெனக் கண்டு சிறை விதிக்கப்பெற்றோருள் நூற்றுக்குப் பன்னிரண்டு விகிதமாயுள்ளோர்கள் முன்னருஞ் சிறையிருந்தவர்களாம்.

இவைகளே சிறைச்சாலை அறிக்கைப் பத்திரத்திற் பிரதானமானவை. 21-ம் ஆண்டிலும் பார்க்க 22-ம் ஆண்டில் ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறையாளர் குறைவாயிருக்கின்றனர். ஆனால் இக்குறைவைக்கொண்டு 21-ம் ஆண்டிலும் பார்க்க 22-ம் ஆண்டிலே குற்றஞ் செய்வோர் தொகை குறைந்துவிட்டதென்று சொல்லுதல் முடியாதாகும். ஏனென்றால் சிற்சில காலங்களிலே நீதிபதிகள் சிறைவிதிப்பதற்குப் பதிலாகப் பெரும் அபராதமும் விதிப்பதுண்டு இப்படி விதிப்பதிலேலே அரசினருக்குப் பல நன்மைகளுண்டு. 21-ம் 22-ம் ஆண்டுகளில் விதிக்கப்பட்ட அபராதப் பணத்தின் தொகைக்கிடையே யுள்ள பேதம் எவ்வளவென்பதையும் அறிந்துகொண்டால் மாத்திரம் இந்த இரு வருடங்களுள் எந்த வருடத்திலே குற்றம் கூடியுள்ளதென்பதை இலகுவில் அறிந்துகொள்ளுதல் முடியும். என்றாலும் கொலைக்குற்றம் 21-ம் ஆண்டைக்காட்டிலும் 22-ம் ஆண்டிற் குறைவாகவிருக்கின்றதென்பது குறித்த அறிக்கைப்பத்திரவாயிலாக நன்கு அறியக்கிடக்கின்றது.

இவை இங்ஙனமாக, இலங்கையிலுள்ள சிறையாளிகளை நடத்துமிடத்தியமாக யாதுஞ் சொல்லத்தக்க நிலையுள. இங்கே மறியற்காரர் விஷயத்தில் மிகப் பழையமுறையையே அனுசரித்து வருகின்றனர். கருடபுராணம் என்னும் தமிழிலே ஒரு புத்தகமுண்டு. அதில் நரகலோகத்திலுள்ளவர்கள் படுங் கஷ்டங்களைக் குறித்த சித்திர விளக்கங் காணப்படும். நரகத்துன்பமும் இருபாறு அந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றது. பாவஞ்செய்தோரை அச்சுறுத்தி நல்வழிப்படுத்துவதற்காகவே அந்நூல் எழுந்ததென்பது பலருடைய கொள்கை. அந்தக் கருடபுராணத்திலே சொல்லப்பட்ட நரக இலக்கணங்களுக்கும் இலங்கைச் சிறைச்சாலையிலக்கணங்களுக்குமிடையேயுள்ள பேதம் சிறிதாகும். ஐரோப்பா அமரிக்கா முதலிய கண்டங்களிலே சிறையாளர் வைத்து நடத்தப்படுதற்கும் இலங்கை இந்தியாவிலே சிறையாளரைத்தடத்தப்படுதற்குமிடையே பெரும் பேதமுண்டு. பிருத்தானியரோஞ் சாதிச் சிறையாளருக்கும் இந்திய இலங்கைச் சிறையாளருக்குமிடையிலே பெரும் பேதம் பாராட்டி வருகின்றனர். இங்கிலாந்திலே சிறையாளருக்கும் மற்றவர்களுக்கும் உடைநடை பாவனையில் யாதும் பேதமில்லையென்றும், தக்க உணவு கொடுக்கப்படுகின்றதென்றும் சொல்லப்படுகின்றது. இதைக்குறித்து "இங்கேன் இப்படி அங்கேன் அப்படி" என்னுந் தலையங்கமிட்டுச் சிலமாசங்கட்குமுன்னர் இப்பத்திரிகையிலேயே ஒரு வியாசம் எழுதியுளளோம். நாகரீகத்தான் மேம்பட்டவரெனச் சொல்லிக்கொள்ளும் ஆங்கிலர் தமக்கொரு முறையும் பிறர்க்குப் பிறிதொருமுறையுமாக அனுசரித்துவருதல் முறையாகாது.

குற்றஞ்செய்த மாணாக்கனை ஆசிரியர் நன்னோக்கங்கொண்டு தண்டித்தல்போலவே, அபராதஞ் செய்த பிரசையை அரசினர் திருத்தும் நோக்கமாகத் தண்டித்தல் வேண்டுமென்றிப் பழிக்குப் பழி வாங்கும் நோக்கமாகத் தண்டிக்கவொண்ணாது. குற்றஞ்செய்தானொருவனை ஏனைய சனங்களிடமிருந்து பிரித்தெடுத்து மறியற்சாலையில வைத்து மனுஷனுக்கு ஆவசியகம் வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் அவனுக்குஞ் செய்து அவனுடைய நியுண முன்பை நல்லறிவூட்டுவதனாலும் தொழின்முயற்சியினாலும் குன்றச்செய்து நல்வழிப்படுத்திப் பின்னரும் உலகத்திலே நன்மையாக வுடடச் செய்யும்படி அனுப்புதல் வேண்டும். தன் மனைவி மக்கள் தந்தை தாயர் சுற்றமித்திரர் என்று சொல்லப்படும் இவர்களைப் பிரிந்திருப்பதே சிறையாளர்க்கு அமைந்த தண்டனையாகும். சிறையாளரை வைத்து நடத்தும் விஷயமாக இக்காலத்து அறிஞர்கள் பல அரிய வியாசங்களை எழுதி வெளியிட்டுள்ளனர். பல அரிய உபந்நியாசங்களைச் செய்துள்ளனர். சீர்திருந்திய நாடுகளிலே அந்த முறைகளை அரசாங்கத்தார் அனுசரித்து வருகின்றனர். அங்ஙனம் அனுசரிப்பதனாற் குற்றங்கள்குறைந்துவிடுவதையும் அனுபவத்திற் கண்டிருக்கின்றனர். இந்த இலங்கையிலும் நமது அரசினர் மறியற்காரர் விஷயத்திற் புதியமுறைகளை அனுசரிப்பரேல், குறித்த அறிக்கைப்பத்திரத்திற் சொன்னபடி நூற்றுக்குப் பன்னிருவர் விகிதம் முந்திச் சிறையிருந்தவர் பின்னருங் குற்றஞ்செய்து சிறைச்சாலை புகமாட்டார்கள்.

---

## ஆன்மவிசாரம்.

(ஓர் பிராமணோத்தம ஸாது எழுதியது.)

(1903. செப்டம்பர் மீ.)

(முற்றொடர்)

மனிதர்களுக்குள்ள கோபம் பொறாமை களிப்பு மதிப்பு ஆசை லோபம் பொய் குறளை தடுஞ்சொல் பயனில்சொல்லாகிய பிறற்று என்னும் இக்குற்ற மெல்லாம் மேலே காட்டிய நோயாளியின் இருமல் போலிருக்கிறது. இவற்றிற்குக் காரணமாகிய மலபந்தம் கசம் போலிருக்கிறது. ஆதலால், இங்கே காட்டிய இக்குற்றங்களுடையாரை, அவை தம்மை வருத்துவதுபற்றியே பிறர் வைகின்றனர். கசரோயற்றால் இருமலறும்; மலபந்தம் அற்றால் இக்குற்றங்களும் அறும்.

ஒவ்வொரு ஆன்மாவும் தன் அறிவு மட்டில் நல்லன என்று தோன்று மவற்றையே மற்றவைகளுக்குச் செய்கின்றன.

கோபாலன், தனக்கு இரங்கிக் கொடுத்த உபகாரத்தைக் கொற்றன் தனது சாமர்த்தியத்தால் தான் பெற்றதென்று மற்றவர்களோடு தன்னை வியப்பாகின்றான். உலகத்திலே, நன்றிகேடென் பனவற்றுள் தன்மையானது இதுவே. கொற்றனுக்கு, இது தனக்கு நல்லதாகவே புலப்பட்டு நடைபெறுவதாயிற்று.

எல்லாரும் தாம் தாம் அவ்வப்போது செய்யும் குற்றத்தனங்களுக்குப் பின்பு பின்பு இரங்குவார்கள். இதனால், செய்யும்போது தெரியாதவர்கள், அல்லது மோகத்தின் மிகுதிச் செய்தவர்கள் என்பது திடமல்லவா!

ஒவ்வொரு ஆன்மாவும் பிறப்பில் எவ்வளவு எவ்வளவு துன்பத்தை நுகர்ந்து கொண்டதோ அதுதான் பிறப்புக்களாற் பெற்ற பயன்.

ஆன்மாக்களுக்குப் பந்தம் ஒழியும் விதம்: கோபம் வந்தே அஃதொழிய வேண்டும்; பொறாமை வந்தே அஃது ஒழியவேண்டும்; அவமதிப்பு வந்தே அஃதொழிய வேண்டும். இப்படியே ஒவ்வொரு குற்றங்களுக்கும் காரணம் உண்டாகியே அவை ஒழியவேண்டும். ஆதலால், தான் திருந்தம் பெறவேண்டியவன், இவை தனக்குச் சம்பவிப்பதைக் காத்திருக்கவேண்டும்,

நமக்குத் துன்பஞ் செய்கிறவன் தெரிவிக்கிறான் "உனக்குக் கோப மிருக்கிற" தென்று; ஏதொன்றால் மேற்படுகிறவன் தெரிவிக்கிறான் "உனக்குப் பொறாமையிருக்கிற" தென்று; திருடன் தெரிவிக்கிறான் "உனக்கு ஆசையிருக்கிற" தென்று. இப்படியே நம்மிடமுள்ள குற்றங்களைப் பிறரே தெரிவிக்கிறார்கள். இவர்கள் இல்லாவிட்டால், நாம் நம்மைச் சரிப்பட்டவராக எண்ணி ஏமாந்துபோவோம். நமது குற்றங்களைத் தெரிவிப்பவர்கள் நமக்குக் குருவாகவும் வைத்தியனாகவும் மதிக்கத்தக்கவர்கள். இவர்களது சகவாசமே நம்மை ஈடேற்றுவது.

நாம் நமக்குச் சம்பவிக்கும் துன்பங்களை அகற்ற முயல்வது எவ்வளவுமடமை. துன்பத்தை அகற்றுவதற்கு முயன்றும் துன்பமே பெறவேண்டுதலால், வருந்துன்பங்களை அகற்ற முயலாமற் சகித்துக் கொள்வதே விவேகம். துன்பங்களைச் சகிக்கவேண்டுமென்பதே ஈசுரகட்டளை. அகங்காரமாடுவதும் ஈசுவரனுக்கு மிக வெறுப்பு.

சுகத்தைப் பெறுவதற்கும் துன்பமே படவேண்டுவதால், அப்படித் துன்பம் அநுபவித்துப் பெறும் சுகத்தாற் பயன் யாது!

நமக்குத் துன்பஞ் செய்பவர்களாற்றானே நாம் அஞ்ஞான நிவிர்த்தி பெறவேண்டியிருப்பதால், நாம் அவர்கள்மேற்றானே அதுபொருட்டாக நன்றியுடையரா பொழுகல் வேண்டும். அவர்களையின்றி நமக்கு அஞ்ஞானநிவிர்த்திகிடையாது.

துன்பத்தை உடன்பட்டு நுகரவேண்டுமென்பது ஈசுரகட்டளை. துன்பங்களை அகற்றமுயலும் முயற்சிகள், அஞ்ஞானத்தை விர்த்திசெய்கின்றன; ஈசுவரதொண்டையும் இழப்பிக்கின்றன; தாமும் துன்பமாயிருக்கின்றன; முடிவற்றனவுமாயிருக்கின்றன; ஜீவரோடு துவிதம் உண்டாகிறது; ஈசனுக்கு நம்மேல் வெறுப்பையும் விளைக்கின்றன. துன்பத்தை உடன்பட்டு நுகர்வது ஈசனுக்கு நம்மேல் தயவை உண்டாக்குகின்றது.

ஜீவன் அஞ்ஞானத்தால் தான் நடத்தப்படுகிறான்; தனக்குச் சுவதந்திரமிலன். ஆகவே, இவனுக்கு யாதொன்றில் அகங்காரமேன்.

அகங்காரம்=மதிப்பு, கோபம், களிப்பு, அழுக்காறு முதலான எவ்வித குற்றங்களையும் அவற்றினியல்புணர்ந்து மெய்யுணர்வால் அகற்றுவதுபற்றி நயமுண்டல்லாமல், அவற்றைப் பயங்காட்டி இடர்ப்படுத்தி அகற்றுவது பற்றி யாதும் பயனில்லை; மெய்யுணர்ந்து நீக்க உதவியாயிருக்கும்.

ஈசனது திருவுள்ளமில்லாமல் ஒரு ஆன்மாவின் கோபம் மற்றொன்றைத் தண்டிக்க அல்லது கொல்லமாட்டாது. ஆதலால் அஞ்ஞானம் ஈசனது ஆஞ்ஞையிலே தொழிற்பட்டு ஆன்மாவை இயக்குகிறது.

வெயர்வைசிந்தச் சரீரம்வருந்தி உழைக்கிறவனுக்குந் துன்பந்தான். அதற்கஞ்சிச் சும்மா விருக்கிறவனுக்கும் அப்போது துன்பந்தான். ஸ்திரீகளோடு சையோகமாயிருப்பவனுக்கும் அப்போது உடல் முதலான பல காரணங்கடோன்றி அப்போது துன்பந்தான். இவ்விதமே எல்லாம் மெய்யுணர்வில்லாதவர்களுக்குத் தத்தமளவில் துன்பந்தான்; ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியீனம்

ஈசுவரனுக்கு ஆயுள் குன்ற வந்தாலும் துன்பத்துக்கு முடிவு வாராது. துன்பம் தன்னை அகற்ற முயலும் முயற்சியாலும் துன்பமாயிருக்கிறது. அத்தகையதாகிய துன்பத்துக்கு முடிவு இந்த க்ஷணத்திலும் பெறலாம். அஃதாவது அது வருந்தோறும் அஞ்சாது தலை கொடுக்கத் துணிந்துகொள்வதே. (வரும்)

---

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக்கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.**

---

## சமாசாரம்.

காலநிலை:—இன்னமும் மழைபெய்யவில்லை. குளிரோடுகூடிய கடுங்காற்று வீசுகின்றது. வயிற்கரம் வயிற்றுளைட்டம் முதலிய நோய்கள் காணப்படுகின்றன.

நல்லைக் கந்தசுவாமிகோயில்:—கலியுகவரதராகிய ஸ்ரீசுப்பிரமணியப்பெருமான் கோயில் கொண்டருளிய இப் புராதன ஆலயத்தில் வருகிற வெள்ளிக்கிழமை (17-8-23) துவஜாரோகணமாகி மகோற்சவம் விதிப்படி சிறப்புற நடைபெறும். இவ்வாலயத்திலே மேற்படி ஆலயத் தருமகர்த்தாவின் முயற்சியினால் திருக்குளத்திருப்பணி முதலிய பலதிருப்பணிகளும் முத்துக்குமாரசுவாமி பிரதிஷ்டையும் இவ்வருடம் புதியனவாகச் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீமாந். சே. இராசநாயக முதலியாரவர்கள்:—இலங்கைச் சுப்பிறீங்கோட்டுப் பிரதம பதிவு உத்தியோகத்தராகவிருந்த முதலியாரவர்கள் இப்பொழுது வடமாகாண உபஉதவி ஏஜண்டாக (Extra Office Assistant) ஸ்தானம் பெற்றிருக்கின்றனரெனக் கேள்வியுற்று அதிக மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ் உபாத்தியாயர் சங்கம்:—இச்சங்கத்தின் இரண்டாங் கூட்டம் இத்தமீ 18௳ சனிக்கிழமைபிற்பகல் 3மணியளவில் தெல்லிப்பழை மிஷன் பாடசாலை மண்டபத்தில் கூடும். அத்தருணம் வித்தியாதரிசி ஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள் "பாடசாலைப் போதனை முறை" என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்வர். சங்கப் பிரமாணங்களும் ஆலோசிக்கப்படும்.

கிரயங்குறைந்த புகைரதப் பிரயாணச் சீட்டு:—கண்டியில் நிகழவிருக்கும் பெரகரா உற்சவத்திற்குச் செல்லும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளின் வசதிக்காக இந்த ஆக்கஸ்ட் மீ 26ம் 27ம் 28ம் தேதிகளில் கண்டியிலிருந்து 50 மைலுக்கு மேற்பட்ட புகைரதஸ்தானங்களெல்லாவற்றிலும் மூன்றாம்வகுப்புப் பிரயாணிகளுக்குக் கண்டிக்குச் செல்வதற்குப் போதற்கான கிரயத்தோடு போதற்கும் வருதற்குமாகிய பிரயாணச் சீட்டுகள் உதவப்படும். இந்தச் சீட்டுக்கள் ஆக்கஸ்ட் மீ 30-௳ வரையிற் செல்லத்தக்கனவாம்.

ஆனையடித்து மாண்டான்:—சென்றவாரம் ஒரு தினம் மாத்தளையைச் சேர்ந்த வீரகாமம் என்னுமிடத்தில் ஒரு யானையைப் பாகன் ஆற்றிற்குக் குளிக்கவார்க்கக் கொண்டுபோனான். ஆற்றில் யானை புரளிபண்ணத் தொடங்கிப் பாகனைத் தூர்த்தியது. இதனையறிந்த யானை முதலாளியின் மகன் ஆற்றங்கரைக்கு வந்து ஆனை தண்ணீர் எற்றிக்கொண்டு நிற்பதைக் கண்டு அதற்குப் பனங்கட்டி கொடுத்து அதனைச் சாந்தப்படுத்திக் கூட்டிக்கொண்டு வீட்டிற்குப் போகும்பொழுது யானை ஒரு கடையிலுள்ள வாழைப்பழங்கள் சிலவற்றைப் பிடுங்கித் தின்ன, யானையுடையவன்மகன் அதனைக் கண்டிக்க, அது சினங்கொண்டு அவனைப் பிடித்துக் காலால் மிதித்து உடனே கொன்றுவிட்டது.

௨௪ மணித்தியாலத்துள்இலங்கையைவிட்டு அகல வேண்டும்:— ஸ்ரீமாந் திரிகூடசுந்தரம் பிள்ளை என்னும் இந்திய தேசாபிமானிகளுளொருவர் சென்ற சிலவாரங்களாகக் கொழும்பிற்குவந்து பல அரியஉபந்நியாசங்கள் செய்துவந்தார். காந்திதினத்தன்றும் ஒரு உபந்நியாசஞ் செய்தார். இவர் இலங்கையிற் சஞ்சரிப்பது எங்கள் அரசாங்கத்தாருக்குப்பிடிக்காமையினாற் போலும் 24 மணித்தியாலத்துள் இவ்விலங்கையை விட்டு அகல வேண்டுமென இலங்கை அரசினர்பிரமாணம் விடுக்க, சென்ற வெள்ளிக்கிழமை பின்பகல் பிள்ளையவர்கள் இலங்கையை விட்டகன்றார். புகைரத ஸ்தானத்தில் எண்ணிறந்த சனங்கள் அன்று சமுகமாகிப் பிள்ளையவர்களைப் பயணமனுப்பினர். ஸ்ரீமாந் திரிகூடசுந்தரம்பிள்ளையவர்கள்சென்ற ஜூன் மீ 28௳ இவ்விலங்கையிலே காலடித்தனர். அப்பொழுது இவருடனே கூடிக்கொண்டுவந்த ஸ்ரீ S R இலக்ஷுமண ஐயரவர்கள் பிரயாணிகளுக்கு விதிக்கப்பட்ட 150ரூபாவின்றி வந்தமையினால் அவரை உடனே பிடித்துக் கப்பலிலேற்றி இந்தியாவிற்கு அனுப்பிவிட்டார்கள். இப்பொழுது பிள்ளையவர்களையும் 24 மணித்தியாலப் பிரமாணத்தை விதித்து இந்த இலங்கையிலில்லாமல் அரசினர் அகற்றிவிட்டனர்.

கலகம்:—இந்த ஆகஸ்ட் மீ 6-௳ காலை கொழும்புக் கடற்கரைத் தெருவில் துறைமுகத்தில் வேலைசெய்யும் கூலிச்சனங்களுக்கும் மீன்பிடிப்பவர்களுக்குமிடையே பெருங் கலகம் நடந்தது. சில தினங்களுக்கு முன் துறைமுகத்தில் வேலைசெய்யுங் கூலிகள் சிலர் சூதாடிக்கொண்டிருக்கும்பொழுது பொலிசாரால் கண்டுபிடித்துக் கொண்டுபோகப் பட்டனர். பின்னரும் ஒருமுறை இப்படிப் பிடிக்கப்பட்டனர். தாங்கள் சூதாடுவதைச் செம்படவரே பொலிசருக்குத் தெரிவித்துவிடுகின்றார்களென்ற சந்தேகம் துறைமுகக் கூலிக்காரருக்கிடையே உண்டானது. குறித்த 6-௳ அதிகாலையில் துறைமுகத்தில் நின்ற இரு செம்படவருக்குக் கூலிக்காரர் அடித்தார்கள். சிறிது

கோரஞ் செல்ல, 300 கூலிக்காரர் ஒருங்கு திரண்டு கரிக்கடையிலுள்ள செம்படவரைத் தாக்கினர். செம்படவரும் 200 பேர் வரையில் திரண்டார்கள். இருபகுதியாரும் செங்கல் போத்தல் கல்லு முதலியவற்றை ஒருவர் மீதொருவர் பிரயோகித்தனர். இதற்கிடையில் சோடா லெமொனெட் ஏற்றிய ஒருவண்டி அந்த மார்க்கமாக வரக் கூலிக்காரர் அவ்வண்டியைப் பிடித்து அதிலிருந்த போத்தல்களைப் பகைவர்மீது பிரயோகித்தார்கள். வண்டிக்காரன் ஒருவாறு இவர்களிடமிருந்து தப்பித் தன் வண்டியையுமோட்டிக்கொண்டு அப்பாற் போகும்போது மற்றப்பகுதியார் அவ்வண்டியைப் பிடித்து எஞ்சியிருந்த போத்தல்களையெடுத்துப் பகைவர்மீது பிரயோகித்தனர். இதற்கிடையிற் பொலிசர் ஆயுதபாணிகளாக வந்து சேர்ந்தனர். உடனே இருபகுதியாருங் கலைந்தனர். 11 பேர் பொலிசராற் சிறைப் படுத்தப்பட்டனர். பலர் காயமடைந்தனர். சந்தைக்குச் சென்ற ஒரு சிறுமியுங் காயமடைந்தனள். பெருங் காயம் எவருக்குமில்லையாம்.

**ஒரு பெரிய பன்றி:**—சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் ஒரு பன்றி வேடிக்கையாகக் காட்டப்பட்டது. அதன் நிறை 1188 பவுண் அல்லது அரை டன்னுக்குமேல் இருந்தது. நீளம் எட்டடி மூன்றங்குலம். உயரம் மூன்றடி ஒன்பதங்குலம். இடுப்பின் சுற்றளவு ஆறடி ஐந்தங்குலம். வயது 25 மாதம். இது சிறு யானையைப் போல் காணப்படுகின்றது. முழுவயதடைந்தால் யானையை ஒத்திருக்கும்.

**ராஜகுடும்பத்தின் வரும்படி:**—பிரிட்டிஷ் ராஜகுடும்பத்தின் செலவுக்கென்று பார்லிமெண்டில் வருஷந்தோறும் ஒருபெருந்தொகை கொடுக்கப்பட்டுவருகிறது. சக்கிரவர்த்திக்கு 4-லக்ஷத்து 70-ஆயிரம் பவுண் கொடுக்கிறார்கள். அதில் ஒன்றரைலக்ஷம்பவுண் சக்ரவர்த்தியின் வீட்டு அதிகாரிகளின் சம்பளத்துக்கும் சுமார் 2-லக்ஷம் வீட்டுச்செலவுக்கும்போகிறது. சக்ரவர்த்தியின் தாயார் அலெக்ஸண்ட்ரா ராணிக்கு 70,000 பவுண் கொடுக்கப்படுகிறது. கனாட்கோமானுக்கு 25000 பவுண். வேல்ஸ் இளவரசருக்கு ராஜாங்க வரும்படியிலிருந்து ஒருதொகையும் கொடுப்பதில்லை. அவருக்குச் சொந்தத்தில் பெரியபூஸ்திதிகள் உண்டு, அவைகளிலிருந்து வருஷந்தோறும் கிட்டத்தட்ட 2-லக்ஷம பவுண் கிடைத்துவருகிறது. சக்கிரவர்த்தியின் மற்றக்குமாரர்களுக்கு வருஷந்தோறும் 10,000 பவுண் கொடுத்துவருகிறார்கள், அவர்களுக்கு கல்யாணமானால் வருஷந்தோறும 20,000 பவுன் கொடுத்து வருவார். மேரிராஜகுமாரத்திக்கு 21 வயது முதல் 6,000 பவுண் கொடுத்து வந்தார்கள். லோகோபகாரி.

**இந்து மதத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டது:**—வைத்தியா என்னும் வாலிபப் பிராமணன் கிறிஸ்துமதத்திலிருந்து மீண்டும் இந்துமதத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டார். ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களின் தலைமையின்கீழ் இந்த வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்துக்குப் பூனாவிலிருந்து அநேக கனவான்களும் பிரமுகர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். ஸ்ரீமாந் பாஸ்கர் ராவ் போபாதுகார் உபந்யாசஞ் செய்கையில், சில பொய்யான விஷயங்களை எடுத்துக் காட்டி ஸ்ரீ வைத்தியாவை கிறிஸ்துமதத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டதைப் பற்றியே பேசினார். கிறிஸ்துமதத்தில் சேர்ந்துகொண்டவர்களை மீட்டும் இந்து மதத்திற் சேர்த்துக்கொள்ளுவதன் சம்பந்தமாகப் பல பண்டிதர்களும் சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்களும் கொடுத்துள்ள அபிப்பிராயங்கள் அடங்கிய சிலவிஷயங்களை ஸ்ரீமாந் கோகேல் வாசித்துக் காட்டினார். சிலசடங்குகள் நடைபெற்றபிறகு ஸ்ரீமாந் வைத்தியாவுக்குப் பூணூல் கொடுத்து இந்துமதத்திற் சேர்த்துக்கொள்ளபபட்டதாக அறிவிக்கப்பட்டது. —தமிழகம்.

---


## WHITE BURLEY TOBACCO.
### வெள்ளை பேர்ளி புகையிலை.

கிருஷிகப் பகுதியாரால் 1914-ஆ தொடக்கம் யாழ்ப்பாணப் புகையிலை சோதனை செய்கை நிலத்தில் இப்புகையிலையில் பரிசோதனைகள் நடத்தப்பெற்றுவருகின்றன.

வருடந்தோறும் லண்டன்மாநகருக்கு இங்கே செய்யப்படும் புகையிலைகள் அனுப்பப்பட்டு இறாத்தல் ஒரு சிலின் 4 பென்சு தொடக்கம் ஒருசிலின் 10 பென்சு வரையும் விற்பனவு செய்யப்பட்டன. சார்ப்புகையிலையின் விலை குறைந்துபோனதால் அரசாட்சியாரின் அநுமதியுடன் கிருஷிகப்பகுதியார் மேற்குறித்த இனப் புகையிலையை வாங்க ஆயத்தமாயிருக்கிறார்கள், யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரிசோதனைத் தோட்டத்தில் கொடுக்கும் பட்சத்தில் ஒரு புகையிலை மரம் 5 சதம் தொடக்கம் 20 சதம் வரையும் கிரயம் கொடுக்கப்பட்டு 33000 புகையிலை மரம் வாங்க சித்தமாயிருக்கிறார்கள்.

திருநெல்வேலி பரிசோதனைத் தோட்ட மானேஜரிடம் அல்லது யாட்பாணம் கிருஷிக உத்தியோகஸ்தரிடமிருந்து ஒரு அவுன்ஸ் 25 சதவீதம் விதை பெற்றுக்கொள்ளலாம்.

F. A. Stockdale,
கிருஷிகத் தலைவர்,

1923ஆ ஆவணியீ 9உ.

(G. 314).


## கடிதம்.

### நல்லூர் கந்தசுவாமி கோயில்.

நம் பிரிய சகோதரிகளே!

நல்லூர் கந்தசுவாமிகோவிற் திருவிழா சமீபிக்கின்றது. ஆகவே பெண்மணிகளாகிய நீவிர் கடந்துகொள்ளவேண்டிய வகையைப் பற்றி சுருக்கச் சில வசனங் கூற விரும்புகின்றேன். அதைக் கூறுவதன்முன் சில வருடங்களுக்கு முன்பாக வடதேசத்தால் வந்த ஒரு சுவாமியார் இந்தக் கல்லூரி மண்டபத்திற் செய்த பிரசாரணத்தின் ஓர் பகுதியை உங்கள் பொருட்டு கூறுகின்றேன். "அவர் தாம் ஒருமுறை அக்கோவில் வீதியிலேயுள்ள மடத்திலேயிருக்கும்போது அநேக பெண்கள் உச்சிப் பொழுதில் அழுத கண்களும் சிந்திய மூக்குமாக நாலுவீதியிலும் அடிக்கடி வீழ்ந்தெழுந்து வணங்கியதைக் கண்டதாகவும் அதைப்பற்றித் தாம் நன்கு விசாரித்த அளவில் அப்பெண்கள் அதிக வைராக்கிய சிந்தையுடன் விரதமிருந்து அகோரமான வெயிலையுங் கவனியாது சுப்பிரமணியப் பெருமானுடன் வாதாடி வேண்டிய பேறுகளைப் பெற்றுவருவதாக அறிந்து தாம் சந்தோஷப்படுவதாகவும் தன்னைப்போன்ற பீ ஏ, எம். ஏ. பட்டம் பெற்றோர் இப்பெண்கள் பெற்ற பேற்றைப் பெறாது, இன்னும் கடவுள் சிவப்போ கறுப்போ என்ற சந்தேகத்துடன் காலம்போக்குவதாகவும் சொல்லி நம்மூர்ப் பெண்களை அதிகம் வியந்து கொண்டாடினர்.

சகோதரிகளே, மேலைத்தேச நாகரீகச் சிறுகிறுப்பு, சிலருக்குட் புகுந்துகொண்டு நம்முன்னோரின் அரிய ஆசார பழக்க வழக்கங்களையும், ஆலய வழிபாட்டையும் பங்கப்படுத்த ஆரம்பிக்கின்றது. மேலைத்தேச கல்வி நகர்ச்சியால் சதா கடவுளையே வணங்கித் தன் நாயகனைத் தெய்வமாக மதித்து, குடும்பகாரியங்களைச் செவ்வனே நடத்தவேண்டிய பெண்கள், பொதுஜன சீர்திருத்த விஷயங்களிலும் நகர பரிபாலன விஷயங்களிலும் தேச ஆட்சி விஷயங்களிலும் தலையிடத் தொடங்கிவிட்டனர். மேலைத்தேச நாகரீகமுதிர்ச்சியடைந்த பெரிய வீடுகள் யாழ்ப்பாணத்தி லிருக்கின்றன. ............................ ஒரு தேசம் சீரடைய விரும்பின் அத்தேசத்திலேயுள்ள கிராமங்கள் சீரடையவேண்டும். கிராமங்கள் சீரடையவேண்டுமானால் கிராமத்திலேயுள்ளவொவ்வொரு குடும்பமும் சீரடையவேண்டும். அக்குடும்பம் சீரடையவேண்டின் அக்குடும்பத்திலேயுள்ள பெண் சதா கடவுளையே தோத்திரித்து; தன் நாயகனைத் தொழுது தன் பிள்ளைகளைக் கண்ணுங் கருத்தோடும் தெய்வபயமுள்ள பிள்ளைகளாக்கிவரத் தெண்டிக்கவேண்டும். இவ்வரிய பெரிய தொண்டை ஒவ்வொரு குடும்பத்திலேயுமுள்ள ஒவ்வொரு பெண்ணுஞ் செய்யின் தேசம் முன்னுக்கு வருதற்குத் தடையுண்டா? பிரிய சகோதரிகளே! இத்தொண்டைச் செய்தற்கு உயர்தரக்கல்வி வேண்டாம்; பிரசங்கம் வேண்டாம்; சபை வேண்டாம்; பத்திரிகை வேண்டாம்; இப்படி எழுதுவதால் எம்மை அநேகர் இவருக்குக் கிறுகிறுப்பு என்று எண்ணுவார்கள். எண்ணினும் எண்ணுக. உலகம் பலவிதம் ஒருவர் கூற்று மற்றவருக்கு வேறாக இருப்பது சகசமே. தற்காலம் பத்திரிகை, சபை, பிரசங்கம் இவைகளால் யாதும் சுகம் இருப்பதாகத் தெரியவில்லை. இவைகள் ஒருவரையொருவர் நிந்தித்து வசை சொல்லும் நிலைக்களமாயிருப்பதேயன்றி வேறொன்றுமன்று. ஒவ்வொரு குடும்பத் தலைவியும் தன் பிள்ளைகளை நேராய்ச் சீராய் வளர்த்தால் தேசம் சீரடைதற்கும் சந்தேகமா? ஒவ்வொருவரும் தன்தன் கடமையைச் செய்யாது பிறர் செய்வதைத் தான் செய்ய உத்தேசிப்பதாலே தேசம் தடுமாறுகின்றது.

1 பிரிய சகோதரிகளே! தற்காலப் பிள்ளை வளர்ப்பைப்பற்றிச் சிறிது ஆலோசிப்பாம். தாய்மார் தங்கள் பிள்ளைகளுக்குத் தாங்களே பால் கொடுத்து வளர்த்தல் கடவுள் கருத்தாயிருக்க, நாகரீகமுதிர்ச்சியடைந்த தற்காலப் பெண்கள் தங்கள் சுகத்தின்பொருட்டு பிறரைக்கொண்டு பால் கொடுப்பிக்கின்றனரே. இதென்ன விபரீதம். பிறர்பாலுண்டு வளர்ந்த பிள்ளைக்கு யார் குணம் பதியும். இன்னுஞ் சிலர் பசுவின் பாலூட்டி வளர்க்கின்றனரே. பசுவின்பாலுண்டு வளர்ந்த சிலரை நாம் நேர் நேராயறிவோம். அவர்கள் குணமும் சற்றேறமாறுதலாயிருக்கிறதை நாம் கண்டிருக்கிறோம். ஆகவே தாய்மார் தங்கள் பாலையே பிள்ளைகளுக்கு ஊட்டுதல் அவசியம்.

(2) பெற்றோர் பிள்ளைகளுக்குப் படமாக இருக்கிறபடியால், அவர்கள் எப்போதும் தாய்மார்பொறுப்பில் விடாது பெற்றோர்பார்வையிலே இருக்கவேண்டும். அப்படி இருக்காவிடில் பிள்ளைகள் ஒழுக்கத்தில் கூறுபட்டிருத்தலையும் நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம்.

3. இப்படியும் பழக்கத்தை காளடைவில் பெற்றோர் பிள்ளைகளுக்குப் பயிற்றிவரல்வேண்டும். பிள்ளைகள் பிறர் பொறுப்பில் இருப்பின் இப்பழக்கம் உண்டாதல் அசாத்தியம்.

4. பெற்றோர் தனவந்தராயிருந்தபோதிலும் பிள்ளைகளை மட்டான சீவியப்போக்கில் பயிற்றிவரல்வேண்டும். தற்காலக் கெடுதிகளுள் மிகக் கேடானது பிள்ளைகள் ஆடம்பர சீவியத்தைக் கடைக்கொண்டு நடக்க விடுவதே. அந்தோ! வறிய குடும்பத்தாரும் தனவந்தரைப் பார்த்து தம் பிள்ளைகளை பெரும் போக்கில் நடத்தி வருதலைக் காண்பது மனசுக்குத் துன்பமாயிருக்கிறது.

5. பிள்ளைகள் விடுதிச்சாலைகளிலே விடப்படுதல் புத்தியன்று. ஏனெனில் அங்கே பல திறப் பிள்ளைகளுடன் கூடி அவர்கள் பயிற்சிக்குப் பங்கம் நேரிடவுங் கூடும்.

6. பெற்றோர் விசேஷமாகப் பிள்ளைகளைச் சமயஉணர்ச்சியிற் பயிற்றுதற்கு எவ்வளவேனும் பின்நிற்கக்கூடாது. இதை எப்படிச் செய்யலாம். தாய் சமயஅனுட்டிப்புள்ளவளாயிருப்பின் பிள்ளையும் அப்படியேயிருக்கும். பிள்ளைகளுக்கு அடிக்கடி சமயநூற் கதைகளைச் சொல்லிவரல் வேண்டும். சமீபத்தில் இருக்கும் கோயிலுக்கு அந்தி சந்தி சென்று வணங்கிவரப் பழக்கல்வேண்டும்.

7. ......................விளையாட்டு, பிள்ளைகள் தேகப்பயிற்சிக் கின்றியமையாததேனும் பொறுப்பான அதிகாரிகளின்றிக் கூடி விளையாடவிடுதல் சரியன்று. தேகப்பயிற்சிக்கு வெளியே விளையாட விடுவதிலும் பிள்ளைகள் தேககாத்திரத்திற்குத் தக்கபடி வீட்டு உபயோகத்துக்குரிய வேலைகளைச் செய்யப் பயிற்றிவரின் தேகம் திருந்துவதோடு பிற்காலத்திலும் அவர்கள் தங்கள் வீட்டுக் கருமங்களைப் பிறர் உதவியின்றித் தாங்களே செய்யக்கூடியவர்களாவார்கள்.

இப்படியே இன்னும் அநேக முண்டு. விரிக்கிற் பெருகும். ஆகையால் என் அன்பார்ந்த சகோதரிகளே, வீட்டுக்குள்ளேயே நீங்கள் செய்யவேண்டிய கடமைகள் பல உண்டு. அக்கடமையைச் செய்யின் தேசம் சற்புத்திர புத்திரிகளாற் றேங்கிவரும். இதை விட்டுவிட்டுச் சங்கம் ஏன்? சபை ஏன்? சபைகூடிச் செய்யும் வேலை எதை யொக்குமெனில் வீட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டு அதை அணைக்கத் தெண்டிப்பதை ஒக்கும்.

பெண்கள் பார்க்கவேண்டிய கருமங்கள் பலவுண்டு, அவற்றை நீங்கள் செய்யுங்கள். ஆண்கள் பார்க்கவேண்டிய கருமங்களை அவர்கள் செய்யட்டும். ஒவ்வொருவரும் தன்தன் கடமையைச் செய்யட்டும். இதையிட்டு ஓர் அம்மாள் கூறும் வண்ணம் நகரபரிபாலனம் தேசஆட்சி இவைகளிற் தலையிட்டுக்கொள்ளாதிருக்கும்படி பணிவாய் வேண்டுகின்றேன். இவையெல்லாம் தற்காலத்துப் போலி நாகரிக ஸ்தாபனங்கள் பொழுதுபோக்கும் விளையாட்டுகள் அறிஞர்களுக்குப் பரிகாசத்துக்கிடம். எச்சரிக்கை! எச்சரிக்கை!!

சாதன நங்காய், நான் எடுத்துக்கொண்ட விஷயம் ஒன்று; அதைத் தொடங்கி எழுதும்போதே வேறொன்றாய் மாறி வந்துவிட்டது; தலைகூர்ந்து மன்னிக்கவும். அடுத்த முறை எடுத்தவிஷயத்தைப் பேசி முடிப்பேன்.

காரை: M. S.

---


### அறிவித்தல்.

இந்துசாதனம் 9-ம் 10-ம் இலக்கங்களிற் சொல்லிய நோட்டீசின்படி இந்தமீ 11ந்உ சனிக்கிழமை தொண்டமானாறு சி. இராமசாமியின் அசையுடைமைகள் விற்பனவு செய்தற்கு அன்றையதினம் மாவிட்டபுரம் ரதோற்சவமாகையால் வாங்கக்கூடியவர்கள் வராமலிருந்தமைபற்றி அன்றையில் விற்பனவை நிறுத்தி இந்தமீ 18உ சனிக்கிழமைக்குத் தவணைபோடப்பட்டதென்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

ஆதிமூலம் இராமலிங்க உடையார்,
வெக்திசுமேஸ்தர்.

(Mis. 373 )


---


### விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 4713-ம் இலக்க உரிமைத்தத்துவவழக்கில் 1923-ம் ஆண்டு ஆனிமீ 4-ந் தேதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் கப்பல் 1923-ம் ஆண்டு ஆவணிமீ 25உ சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

நல்லூரிலிருந்து காலஞ்சென்றுபோன சங்கரப்பிள்ளை ஆறுமுகமாப்பாண முதலியாரின் அசைவுள்ள ஆதனம்.

ஊர்காவற்றுறைத் துறைமுகத்திலே கட்டப்பட்டிருக்கும் "மயூர விஜயன்" என்னும் பாய்க்கப்பல் யாழ்ப்பாண ரேசில் 1918-ம் ஆண்டு 2-ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டது. 153 டன் நிறையுள்ளது. (மூவாயிரம் மூடை ஏற்றுமதி செய்யக்கூடியது.)

(பார்க்க விருப்பமுள்ளவர்கள் ஊர்காவற்றுறைத் துறைமுகத்திற் பார்த்துக் கொள்ளலாம்.)

B. Emmanuel,
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம்,
1923-ஆ ஆவணிமீ 1உ. (Mis. 372.)


### செய்வன திருந்தச்செய்.

அன்பார்ந்த சகோதரிகளே, "நாம்மானிடப் பிறவியெய்தியதின் பிரயோசனம் என்ன? அதைச் சிறிது சிந்திப்போம். நாம் ஒரு வேலையைச் செய்யப்புகும்போது, அதற்கொரு காரணமில்லாமல் அவ் வேலை சம்பவிப்பதில்லை. அதேபோல் நாம் இவ்வவனியின்கண் பிறந்ததும் ஒருகாரியத்தின் நிமித்தமே. அக்காரியம் யாதென நாம் நற்புத்திநுட்பத்தால் அறிந்து, அதற்காகவேண்டிய வேலைகளைச் செய்து, அக்காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்பதே எம்பெருமான் நமக்கிட்ட ஆக்ஞை.

நாம் முற்பிறப்பில் செய்த பாபபுண்ணியங்களால் இப்போது அநுபவிப்பதே ஊழ்வினை. எங்களிற்பலர் தங்கட்கு எவ்விதஇன்பம், அல்லது இன்பம் நேர்ந்தாலும் எல்லாம் ஈசன செயல், நாம்செய்த ஊழ்வினையின்படி நடக்கும். என்று கண்மூடித்தனமாயிருந்து விடுகிறார்கள். ஒருவன் ஒரு வழியே செல்லும்போது அவ்வழியில் ஓர் கிணறிருக்கக்கண்டும் இது நம்மை என்னசெய்யும், எல்லாம் என் ஊழின் பயன். என்று நினைத்துச் சென்றால், அவன் கிணற்றுள்வீழ்வானென்பதிற் சந்தேகமென்ன? அதேபோல் நமக்கு ஓர் இடருற்றகாலத்தில், அது நம் ஊழ்வினை யென்று மௌனமாயிருத்தலாகாது. அதற்கேற்ற வழியைத்தேடி அவ்விடரைப்போக்க முயற்சிசெய்தல் வேண்டும்.

"மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார், எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார் —செவ்வி, அருமையும்பாரார் அவமதிப்புங் கொள்ளார், கருமமே கண்ணாயினார்"

நாம் ஒரு வேலையைச் செய்யப்புகுந்தால், அதைத் தாமதிக்காது விரைவிற் செய்துமுடித்தல் வேண்டும். பசியாயிருக்குது, நித்திரை வருகுது என நினைத்து அவ்வேலையில் தாமதித்தலாகாது. ஒருவன் எல்லாம் அவன் செயல், என அதற்கென்று ஒரு வழியும் தேடாது மௌனமாயிருப்பது விருப்பு வெறுப்பற்றுக் கடவுளின் மகிமைகளை முற்றுமறிந்த ஞானிகளே. ஏனையோர் சோம்பல் என்னும் வியாதியால்கட்டுண்டு, எல்லாம் நாம்முற்பிறப்பில் செய்த ஊழின் பயனென்பர். தாம் நினைத்தகாரியம் முடிந்துவிட்டால், தம்மைப் போல் சமார்த்தியமுள்ளவர் வேறொருவரில்லையென்றும், அக்காரியம் நிறைவேறாவிட்டால், அது நம் ஊழின்பயன், என்றும் ஊழின்மேல் குற்றத்தைச் சுமத்துகிறார்கள். அறிவாளிகள் இவ்விதம் எண்ணார்கள். நிற்க.

நாம் இப்பொழுது எடுத்திருக்கும் சரீரத்திற்குக் காரணசரீரம் என்று பெயருண்டு. ஏனெனில், நாம் பூர்வத்தில் செய்த நல்வினை, தீவினை என்னும் இருவினைகளையும் அநுபவித்தற்கும், இனிமேல் பிறக்கும் பிறப்புக்கும் ஆகவேண்டிய பாபபுண்ணியங்களைச் செய்வதற்கேயாம். இதனாலேயே பெரியோர் இச்சரீரத்திற்கு,காரணசரீரமென்றுபெயரிட்டார்கள்.

பிறந்தவர் இறப்பர் என்பது நிச்சயம். நீர்மேற் குமிழிபோல் நிலையற்ற இக்காயத்தை நாம் உண்மையென நம்பிப் பிறப்பென்னும் கடலைக்கடக்க இயலாமல் உலகவாழ்வில் மயங்கிவிடுகிறோம். இதனாலே நம்பிறவி மென்மேலும் அதிகரிக்குமேயன்றிக் குறையும் என்பதாயில்லை.

"இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோதிடமில்லையே, அநியாயமாயிந்த உடலைநானென்றுவரும் அந்தகர்க்காளாகவோ, என்று தாயுமானசுவாமிகளும் கூறியிருக்கின்றனர்.

இத்தகைய அநித்தியதேகமிருக்கையிலே நம்மாலியன்றளவு நற்குண நற்செய்கைகளைச் செய்து, எங்கும் நிறைந்த சர்வேஸ்வரனது பாதாரவிந்தங்களையடைய முயலல்வேண்டும். அதனைவிடுத்துச் சோம்பலே மேலிட்டு யாவற்றிற்கும் கண்மூடித்தனமாயிருந்து, அந்தோ, நாம் இத்தேகம் எடுத்தால் அடையும் பயன் யாது? ஆதலால் பலவிததுன்பங்களையும், அநேகபிறவிகளையும் எடுத்தபின் கிடைப்பதற்கரிய இம்மானிடப்பிறவியைப் பெற்றநாம், செய்யவேண்டியமுயற்சிகளைச் செய்தாலன்றோ, நம் பிறவி பயனுறும், நாம் யாவற்றிலும் உயர்ந்ததும் நம் பிறவிப்பிணியை நீக்க வழிதேடக் கூடியதுமான இம்மனுடப்பிறவியெடுத்திருக்கும் பொழுதே, கடவுளைத் தொழுதும், மற்றும் ஜீவராசிகளிடம் கருணைவைத்தும், அநேகதானதருமங்களைச் செய்தும், நற்பதவியடைய முயலல்வேண்டும். அஃதன்றோ நமக்கழகு. அவ்விதம் நாம் தானதருமம் முதலிய நற்செய்கைகளைச் செய்யவிரும்புங்கால் தேகசுகம் அவசியம்வேண்டும். சிலசமயம் தீச்செயல்கள், நற்செயல்கள் போல் நமக்குத் தோன்றி நற்றிலக்ஷ்மைமாக்கத்திற்குள்ளாக்கப் பார்க்கும். ஆதலால் நாம் புறத்தோற்றத்தை நம்பி மோசம்போகலாகாது. நன்றாயாராய்ந்து பார்த்து இதனால் நன்மைசம்பவிக்குமோ, தீமைசம்பவிக்குமோவென்றறிந்தே எவற்றையும் செய்தல்வேண்டும்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவமென் பதிழுக்கு".

என்று திருவள்ளுவநாயனார் சிலம்பியதை உற்றுநோக்குங்கள். எத்தொழிற்கும் மனத் திடம் அவசியம் வேண்டும். ஒரு வேலையைச் செய்யத் தொடங்கிவிட்டு 'அது நம்மா லாகாது' என்று நினைத்துப் பின்வாங்கலாகாது.

இங்ஙனம்,
க. நவரத்தினஅம்மாள்,
வண்ணார்பண்ணை.

## பங்கஜத்தைக் கிறிஸ்தவமதத்துக்கு மாற்றுதல்.

### ஸ்ரீமாந் ஆண்ட்ரூஸ் அவர்களின் கண்டனம்.

### பாதிரிமார்களின் செய்கைகள் கண்டிக்கப்பட்டன.

ஸ்ரீமாந் C. F. ஆண்ட்ரூஸ் சென்னை "சுயராஜ்யப்" பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதுகின்றார்:—

சென்னையில் பாதிரிமார்கள் செய்த வேலைகள் உண்மையாயிருந்தால் அவர்களைக் கண்டித்து, சுயராஜ்ய பத்திரிகையில் எழுதப்பட்டிருந்ததில் நானுஞ் சேருகின்றேன். தூக்கிக்கொண்டு போகப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட சிறு பெண் குறிக்கப்பட்டிருந்த வயதுடையவளாய் இருந்தால், மேற்படி செய்கை அந்தரங்கமாகச் செய்யப்பட்டிருந்தால், பின் தியாய நிலைமை எவ்வாறு இருந்தபோதிலும் பொதுஜனங்களின் தீர்மானம் எவ்வாறு இருக்குமென்பதைப்பற்றி என்னுடைய சொந்த மனதிலுண்டான எண்ணத்திற்குச் சந்தேகமேயில்லை. கிறிஸ்து பேரை வைத்துக்கொண்டு வேலைசெய்ய வந்திருக்கும் லேடி பாதிரிமார்களின் செய்கையைவிட பொதுஜனங்களின் தீர்மானம் கிறிஸ்தமதப்படி அதிக உண்மையுள்ளதென்று நான் எண்ணுகின்றேன். இந்த அந்தரங்கவழியில் கிறிஸ்தே வேலைசெய்து ஒரு சிறு குழந்தையின் விஷயமாக் குடும்பத்தைக் கெடுப்பார் என்று நான் எவ்விதத்திலும் கருதமாட்டேன். எல்லாம்எதற்காக? எல்லாம்ஞானஸ்நானம் பெறவே. அத்தகையது இக்குழந்தை கிறிஸ்தமதத்தைச் சார்ந்ததென்று வெளியிற் காட்டுவதற்காகவே ஓர் இளம்பெண்ணின் வாழ்நாட்களில் தந்திரம் மோசம் அந்தரங்கம் முதலியவைகளைச் செலுத்துவதில் உள்ளத்தில் உழைக்கும் கிறிஸ்து இஷ்டப்படாதவராயிருப்பார். வெளிப்பார்வைக்கு ஞானஸ்நானம் பெறுவது தான் ஏற்பட்டிருக்கிறது. மதம் குடும்பம் கட்சி முதலியவைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்களை நூறுவிதமாக அவர் ஒழித்து மனிதனின் இருதயத்தையே நேரில் கவனித்திருப்பதாக வேதபுத்தகத்திலிருந்து தெரியவருகின்றது. ரோமர்கள் சமரெரியர்கள் முதலியவர்களெல்லோரும் அவருடைய காலத்தில் வெளிப்படையான சோதிலைச் சாராமலிருந்தபோதிலும் கடவுளுக்குச் சொந்தமானவர்களென்று ஒப்புக்கொண்டிருக்கின்றார். அவருக்குத் தெரியாதவர்களையுங்கூட வருந்தும் மனிதர்களிடத்தில், பிரியமாய் இருந்திருந்தால் தம்மைப் பின்பற்றுகின்றவர்களென்று அவர் தமது கடைசித் தீர்ப்பில் கூறியிருக்கின்றார். மோசடியாய் வேலைசெய்கின்றவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறியிருக்கின்றார்:—"வஞ்சகர்களே, உங்களுக்குத் தீங்கு உண்டாகும். நிலமும் நீரும் எவ்வாறு ஒன்றாய் இருக்கின்றனவோ அதைப்போலவே எல்லோரும் ஒன்றென்று கருதுங்கள்."

எவ்விதத்திலும் ஞானஸ்நானம் பெறும் அவருடைய கொள்கைக்கு ஆதாரமாக முன்கொண்டுவரப்பட்டிருக்கும் ஒரு வாக்கியந்தான் எனக்குத் தெரியும். அவ்வாக்கியம் அர்ச் மார்க்கு சுவிசேஷத்தின் கடைசிப்பாகத்திற் கூறப்பட்டிருக்கின்றது. "நம்பப்பட்டு ஞானஸ்நானம் பெறுகின்றவன் காப்பாற்றப்படுவான்; ஆனால் நம்பாதவன் கண்டிக்கப்படுவான்." ஆனால் இவ்வாக்கியம் அர்ச் மார்க்கின் மூலச் சுவிசேஷத்திலுள்ளதல்ல. அது யாரோ ஒருவரால் வெகுநாட்களுக்குப் பின்னர்ச் சேர்க்கப்பட்டது. அர்ச் மார்க்கின் மூலச் சுவிசேஷம் இழக்கப்பட்டபொழுதாதன் அது சேர்க்கப்பட்டிருந்தது. அவ்வார்த்தைகளெல்லாம் உண்மையில் கிறிஸ்துவின் வார்த்தைகளல்லவே.

பூரா கேள்வியையும் இன்னும் பலமாய்க் கவனிக்கலாம். சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் குணங்கள் பூராவையும் படித்து ஒரு மதத்திலிருந்து வேறொரு மதத்துக்கு மாற்றுவதில் எப்பேர்ப்பட்ட கேவலமான முறைகள் பாதிரிமார்களால் நடத்தேறியிருக்கின்றதென்பதைக் கவனிக்கவே நாம் ஆராய்ச்சி செய்யவேண்டியது. மனிதர்களையும் ஒரே குறுக்கான பாதையில் நடத்தப் பிரயாசை எடுக்கும் வஞ்சகர்களைச் சார்ந்தவரல்லர் கிறிஸ்து. ஆனால் குறுக்கமானவர்கள் வஞ்சகர்கள் முதலியவர்களை அடக்கி நற்பாதையைத் திறந்து வைக்கப்பட்டவரே கிறிஸ்து. எவ்விதமான பலாத்காரத்தையும் நம்புகிறவர்களில் அவர் ஒருவரல்லர். மதவிஷயங்களில் தலையிடுவோர்களில் கடைசியானவர். வெளியாக ஒன்றையுங் கவனிக்காமல் உள் ஆத்மாவையே நம்புகிறவர். எந்தப் பாடசாலைக்காவது உபகாரமாகக் கொடுக்கும் பொருட்பணம் கொடுக்கும்போது மனச்சாட்சி விதி அவசியமிருக்கவேண்டுமென்று நான் பல ஆண்டுகளாக வற்புறுத்திவருகிறேன். கிறிஸ்துநாதரின் உண்மைத்தொண்டராக இருக்கும் எவரும் இவ்வபிப்பிராயத்துக்கு எதிர்மொழி கூறுவாரென்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை."

—திராவிடன்.

---

### விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 3805-ம் இலக்க உரிமைத்தத்துவ வழக்கில் 1923-ம் வூ ஆடிமீ 27-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் புலோப்பளை, வண்ணான்கேணி, தன்மக்கேணிக் காணிகள் 1923 வூ புரட்டாதிமீ 1ந்தேதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கமும் முகமாலை வேம்பொடுகேணிக் காணிகள் புரட்டாதிமீ 3உ திங்கட்கிழமை முற்பகல் 7 மணி தொடக்கமும் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### விபரம்.

பச்சிலைப்பளியைச் சேர்ந்த புலோப்பளையிலிருந்து காலஞ்சென்றுபோன சின்னத்தம்பியார் மூத்ததம்பியின் ஆதனம்.

#### புலோப்பளை.

1. தெருவில் வளவு பர. கில. இலா. $33\frac{1}{2}$. இதில் அரைவாசி.
2. வேம்படி வளவு பர. கில. இலா. 28. இதில் ஆறில் ஒருபங்கு.
3. வளவும் ஆத்தியடியும் பர. கில இலா. 123. இதில் ஆறில் ஐஞ்சுபங்கு.
4. குரியன் புளியடி பர. கில. இலா. $33\frac{1}{4}$.
5. அரவடி கிழக்குவானும் தரவையும் பர. செ. இலா. 80. இதில் பதினாறில்ஒன்று.
6. அரவடி கிழக்குவானும் தரவையும் பர. செ. இலா. 80. இரட்டாலை பர. செ. இலா. 30. தலையாடி பர. செ. இலா. $22\frac{1}{4}$. எல்லாமாக பர. செ. இலா. $132\frac{1}{4}$. இதில் பதினாறில் ஒருபங்கு.
7. இரட்டாலை பர. செ. இலா. 30. தலையாடி பர. செ. இலா. $22\frac{1}{4}$. எல்லாமாக பர. செ. இலா. $52\frac{1}{4}$. இதில் அரைவாசி.
8. இரட்டாலை மேற்குப் பங்கும் இரட்டாலைக் குளமும். பர. செ. இலா. 22. இதில் எட்டில் ஒருபங்கு.
9. ஆனந்தப்பள்ளவளவு பர. கி. இலா. $33\frac{1}{2}$. இதில் அரைவாசி.
10. ஆள்வான்கேணி பர. செ. இலா. 75. இதில் பதினாறில் ஒருபங்கு.
11. இன்னாசிமணற்காடு பர. கி. இலா. 14. இதில அரைவாசி.
12. உப்புக்கேணி அருகு உப்புக்கேணி பர. செ. இலா. 66 குளி7. இதில் அரைவாசி.
13. முடிச்சுப்பள்ளி வளவு பர கி. இலா. 42 குளி15. இதில் எட்டில் ஒருபங்கு.
14. குன்றத்தபள்ளமும் மறு பிரிவுகளும் பர. கி. இலா. 11. இதில் ஆறில் ஒரு பயிர்ப் பங்கு.
15. பணியாரப்பரப்பு பர. கி. இலா. 60 குளி 14. இதில் பன்னிரண்டில் ஒருபங்கு.
16. பணியாரப்பரப்பு பயிர்ப்பங்கை நீக்கி பர. கி. இலா. 70. இதில் காற்பங்கு.
17. குணத்தன்பள்ளம் பர. கி. இலா. 72 குளி 2. இதில் மூன்றில் ஒருபங்கு.

#### வண்ணான்கேணி.

1. திரைக்குளம் 1 எக்கர் 1 றூட் 10 பேச். இதில் அரைவாசி.

#### தன்மக்கேணி.

1. குடியிருந்த வளவு குடியிருந்தவளவு பர. கி. இலா. $63\frac{1}{4}$ தேத்தாவடி பர. கி. இலா. 80. இத்தியடி பர. கி. இலா. 7. எல்லாமாக பர. கி. இலா. $150\frac{1}{4}$.

#### முகமாலை.

1. அறுகம்புற்று பர 50.
2. தெண்டல் பர. கில. இலா. செல் இலா. $281\frac{1}{2}$.
3. சலாத்தி பர. கில. இலா. 200. டை பர. கில. இலா. 50. வண்ணான் தாவுக்கு மேற்குத் தறை பர. செ. இலா. 50.
4. நஞ்சக்காடு 18 எக்கர் 1 றூட் 16 பேச். தென்னந்தோட்டம்.
5. நரியன்குருமான் பர. கில. இலா. 10.
6. புவனிகூடலும் மறுபிரிவுகளும் பர. கில. இலா. 40.
7. நரியன்குருமானும் மறுபிரிவுகளும் பர. கில. இலா. $73\frac{1}{2}$.

#### வேம்பொடுகேணி.

1. குடியிருந்த வளவும் கொச்சிப் பள்ளமும் மறுபிரிவுகளும் பர. கில. இலா. 52, குளி $9\frac{7}{8}$. இதில் பன்னிரண்டில்பதினொரு பங்கு.
2. வீரதேவன்தோட்டம் பர. கில. இலா. $20\frac{3}{4}$. இதில் அரையாசி.
3. கிலன்பனை ப. கில இலா. 5. இதில் அரைவாசி.
4. இராமன் வளவு பர. கில. இலா. 45.
5. இராமன் தோட்டம் பர. கில. இலா. 15. இதில் ஒன்பதில் ஒரு பங்கு.
6. கூளாமாவடி பர. கில. இலா. 20.

யாழ்ப்பாணம், 6—8—1923.

க. சிவப்பிரகாசம், கொம்மிஷனர்.

(Mis. 370)

---

## சருவஞானோத்தர ஆகமம்.

### ஞானபாதம் தமிழ் மூலமும் மூத்திரத்ந விருத்தியும்.

இது ஸ்ரீகண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப் பெறும்.

இங்ஙனம்,

பொ முத்தையபிள்ளை, சிவாகம சங்கம், தேவகோட்டை

(H. 20)

---

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றாவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

உத்திரவாதமுள்ளது

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்தும மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனும். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டைபூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றாவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

என் மேல்விலாசம்:—

மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ், கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை, பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.

(Y. 19).

---

### தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை, தொண்டமானாறு.

(H. 16.)

---

### பேசெல்மிஷன் கலிக்கற் ஓடுகள்.

கலிக்கற்றிலுள்ள பேசெல்மிஷன் தொழிற்சாலையிலே செய்யப்படும் இவ்வோடுகள் பெலன், செப்பம், நிலைக்குந்தன்மை இவைகளில் ஒப்பில்லாதவாய் மற்றெல்லா ஓடுகளிலும் விசேஷமானவென்வுறு இத்தேசத்திலும் பிறதேசத்திலுமுள்ள நிபுணர் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. சந்தேகப்படுவோர் சென்ற 25 வருடங்களாக மேன்மையாய் மதிக்கப்பட்டுவரும் இவ்வோடுகளால் வேயப்பட்டிருக்கும் ஏராளமான கட்டிடங்களைப் பார்க்கவும்.

ஓடு வாங்குஞ் சிநேகிதரே, வாங்குவதற்கு முன் நீங்களே ஓடுகளைச் சோதனைசெய்து பார்த்து உங்களைத் திருத்திசெய்துகொள்ளுங்கள்.

உவில்லியம்மேதர் அன் சன்ஸ், தனி ஏசன்றர், (Sole Agents)

(H. 13.)

---

### காசிநாடா சேலை.

16 முழ நீளம்; $2\frac{1}{2}$ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

### வெள்ளிக்கெண்டைச்சால்வை.

$5\frac{1}{2}$ முழ நீளம்; $2\frac{1}{2}$ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் செய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:

கனக அண்டு கம்பெனி, பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

(Y. 18.)

---

### உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

### மூலத்திற்கு குருநாகபஸ்பம்

ஆப்றேஷன் அவசியமில்லை; மூளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், சுவே, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவுநாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நீற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

### மாந்திரிக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரியசித்தி, தொழில்விர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள் மெடல்கள் பெற்ற

C மலையப்பசாமிபிள்ளை, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி. S. I.

(H. 19).

---

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.